# புறநானூறில் பாரியின் மனித நேயம்

**அ. தர்ஷன்**
இரண்டாமாண்டு முதுகலைபட்ட மாணவன், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783319

**ஆய்வுச்சுருக்கம்**

*புறநானூறு பண்டைத் தமிழகத்தில் அரிய வரலாற்று நூல்களில் ஒன்று. பண்பாட்டு களஞ்சியம், இலக்கிய கருவூலம், புலவர்கள், புலவர்களை போற்றி அவர்களின் அறிவுரைகளை செவிமடுத்து ஒழுகிய சிறப்புகளும் மன்னர் தம் மான மாண்பு பற்றிய அறிய குறிப்புகளும் போர்த்தினவுற்று அறமுறை பிறழாது போர் புரிந்து மார்பில் வேலேற்ற மைந்துடைக் காளையரின் வீர பெருமைகளும், மூவேந்தரின் குடிமை முதலான பண்புகளும், குறுநில மன்னர்களின் ஈகை, வீரம், ஒப்புரவு முதலான சால்புகளையும் சாவுற்ற தம் மைந்தரின் உடல் கண்டு பெருமிதம்மெய்திய தாயாரின் மறக் குணங்களும் போல கடையெழு வள்ளல்களின் மனம் உவந்து பிறருக்கு கொடுத்துதவும் மனப்பாங்கினை சங்க இலக்கியங்கள் மனிதநேயத்தினை நமக்கு உணர்த்தி நிற்கின்றன. அந்த வகையில் பாரியின் மனிதநேயத்தை இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.*

***கலைச்சொற்கள்:*** *புறநானூறு. மனிதநேயம், பாரி, கொடை.*

## முன்னுரை

*தமிழ்க் கருவூலம் என்று அழைக்கப்படும் புறநானூற்றில் பல மன்னர்களின் வாழ்வியல் காணப்படுகின்றன. அவற்றுள் பல மன்னர்கள் மனிதநேயம் மிக்கவர்களாக உள்ளனர். அவற்றுள் கடையேழு வள்ளல்களில் ஒருவர்தான் பாரி. அவரின் மனிதநேயம் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

## பாரியின் மனிதநேயம்

*வேல் பாரி பரம்பு மலையை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த குறுநில மன்னர் ஆவார். கடைச்சங்க காலத்தைச் சார்ந்தவர். வேளீர் குலத்தில் பிறந்ததால் வேல் பாரி என அழைக்கப்பட்டார்.*[1] *பாரி பரம்பு மலையையும் அதனைச் சூழ்ந்த பகுதிகளையும் ஆண்டவர். பரம்பு மலை சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சிங்கம்புணரி அருகில் உள்ள காரைக்குடியில் இருந்து மேற்கே 42 மைல் தொலைவிலும் மதுரையில் இருந்து வடக்கு 63 மைல் தொலைவிலும் அமைந்துள்ளது. பரம்பு மலை சங்ககாலத்தில் முல்லைக்கு தேர் தந்த வள்ளல் பாரி வாழ்ந்த மலையாகும். இம்மலை கபிலர் முதலான பல புலவர்களால் பாடப்பெற்ற உடையதாகும்.*

***சுரும்பு உண***
***நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்***
***சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய***
***பிறங்கு வெள்ளருவி வீழும் சாரல்***
***மரபின் கோமான் பாரியும்***[2]

*என்ற பாடலில் பாரியின் மனிதநேயத்தை விளக்கியுள்ளது.*

*சங்ககாலத்தில் பரம்பு மலை எனவும், பின்னர் திருநெல் நடக்கும் எனவும், சமய இலக்கியங்களில் திருக்கொடுக்குன்றம் எனவும் பெயர் பெற்ற இம்மலை தற்போது பிரான்மலை எனவும் அழைக்கப்படுகிறது.*

*இவர்கள் முல்லைக்கு தேர் தந்த பாரியின் பெண்கள்தான் அங்கவை, சங்கவை. மாட மாளிகையில் வாழ்ந்த இவர்கள் தங்கள் தந்தையை இழந்து தவித்த போது அடைக்கலம் தந்து மனம் முடித்து வைத்தவர் வள்ளல்*

பாரியின் நண்பரான புலவர் கபிலர் என்ற செய்தியும் இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

**'சேயிழை பெருகுவை வாள் நுதல் விறலி**
**தடவு வாய்க் கலித்த மா இதழ் குவளை**
**வண்டுபடு புதுமலர்த் தன் சிதர் கலாவப்**
**பொய்யினும் பொய்யாது ஆயினும் அருவி**
**கொள் உழி வியன் புலத்துழை கால் ஆக**
**மால்புடை நெடு வரைக் கோடுதொறு இழிதரும்**
**நீரினும் இனிய சாயற்**
**பாரி வேள்பாரி பாடினை செலினே'**

**- (புறநா.105:1-8)**

என்பதனை கபிலர் பாரியை பற்றி கூறும்போது மழை பெய்தாலும், பெய்யாமல் போனாலும், எக்காலமும் அருவியில் நீர் கொட்டுவது போல பாரியின் கொடைத்தன்மை விளங்கும். உழுது விதைத்து நிலத்திற்கு மலை உச்சியிலிருந்து இருக்கும் நீர் போல வள்ளல் பாரி வாரி வழங்கும் வள்ளல் தன்மை கொண்ட மனித நேயத்தை குறிப்பிடுகிறார்.

வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன். பசியினால் இளைத்தே வீடு தோறும் இரந்தும் பசி அறாது அயர்ந்த வெற்றிரை கண்டுளம் பதைத்தேன் என்ற வள்ளலாரின் பாடல் கேட்க, பாரி மன்னன் இடம் சென்றால் பசியை போக்கி வறுமையை ஒழிக்கும் குணம் என்பது தெளிவாகிறது.

**'நல்லவும் தீயவும் அல்லகுவி இணாப்**
**புல் இலை எருக்கம் ஆயினும் உடையவை**
**கடவுள் பேணேம் என்னா ஆங்கு,**
**மடவர் மெல்லியர் செல்லினும்**
**கடவன் பாரி கை வன்மையே!'**

**- (புறநா.106:1-5)**

இப்பாடலில் நம் கடவுக்கு பூஜை செய்யும் போது நல்ல வாசனையுடைய நறுமண மலர்களால் பூஜை செய்தாலும் வாச னையற்று இருக்கும். பூவை சூடினால் கடவுள் நமக்கு அருள் வழங்குவார். அதுபோல பாரியை அறிவில்லாதவர்கள் சென்று பொருள் கேட்டாலும், வலிமை இல்லாதவர்கள் பாரியிடம் சென்றாலும், வழங்கி அவர்களை வரச் செய்வான் பாரி என்று கபிலர் பாரியின் வள்ளல் தன்மையை எடுத்தியம்பி உள்ளார்.

பாரியின் பரம்பு மலையில் வாழும் குறமகள் தான் சமையல் செய்ய வேண்டி, விறகு கட்டைகளை காட்டில் பொறுக்கி வந்து, அடுப்பு பற்ற வைத்து எரிக்கும் போது அதிலிருந்து சந்தன வாசனை வரும், அந்த வாசனை பரம்பு மலை சாரலில் உள்ள வேங்கை மரங்கள் எல்லாம் தவழ்ந்து சென்றது. இதிலிருந்து பரம்புமலை நாட்டில் எந்த அளவுக்கு வளம் நிறைந்த நாடு என்பதை போல் அவர் விளக்கியுள்ளார். இதுபோல பாரியும் தன்னை நாடிவரும் பரிசில் இருக்கு பரம்பு மலையையும் பங்கிட்டு கொடுப்பார். பரிசு வேண்டுவோர் பாரியை நீதான் எனக்கு பரிசாக வேண்டும் என்று கேட்டால் உடனே வருகிறேன் என்று சொல்லாமலேயே உடனே புலவரின் பணி செய்யத் தொடங்கி விடுவான் என்று பாரியின் மனிதநேய தன்மையை பெருமைப்பட கூறியுள்ளார் கபிலர். என்பதை,

**'குறத்தி மாட்டிய வறல் கடைக்கொள்ளி**
**ஆரம் ஆதலின் அம் புகை அயலது**
**சாரல் வேங்கைப் பூஞ்சினை தவழும்**
**பரம்பு பாடினர் அதுவே அறம் பூண்டு**
**பாரியும் பரிசிலர் இரப்பின்**
**வாரேன் என்னான் அவன் அண்ணே'**

**- (புறநா.108:17-19)**

இப்பாடல் அணிகள் பறைசாற்றுவதாக அமைகின்றன.

**எத்துணையும் பேதமுறாது எவ்வுயிருந்**
**தம்முயிர் போல் எண்ணியுள்ளே**
**ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்**[3]

என்ற வள்ளலாரின் வரிகள் பாடலின் மனிதநேயத்திற்கு ஒத்த கனவாக அமைந்துள்ளது.

விரலியானவள் பாரியின் பரம்பு மலையை பற்றி பாடியதும் நாட்டையே சிறிதும் யோசிக்காமல் வழங்கியவன் பாரி என்று பாரியின் ஈதல் மனிதநேயத்தை கபிலர் என்பதை,

**'சுகிர் புரி நரம்பின் சீரியாழ் பண்ணி**
**வாரை ஒலி கூந்தல் நும் விறலியர் பின்வர,**
**ஆடி நீர் பாடினிர் செலினே**
**நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே'**

**- (புறநா.109:11-18)**

இப்பாடல் அடிகளில் விருந்தோம்புகிறார்.

பாரி மன்னனின் வள்ளல் தன்மையை புகழும் கபிலர் பாணர்களின் உணவு பாத்திரம் நிரம்ப பரிசளித்து அதனைக் கண்டு மனம் மகிழும் மனித நேயம் கொண்டவர் என்கிறார்.

முரசு கட்டிலில் அமர்ந்து ஆட்சி புரியும் அரசர்கள் செய்யும் கொடையை காட்டிலும் அவர்களுக்கு மிகவும் அதிகமாக வழங்கும் பெருமைமிக்க வேந்தன் வேல்பாரி தன்னை நாடி வந்தவர்களுக்கு புற்றின் ஈசனை மோரோடு கலந்து புலிகளையும் கொடுத்து மகிழ்வான். மேலும் சிந்தனையை கொடுத்து மகிழ்ந்தவன் பாரி. அத்தகைய கொடைத்தன்மை கொண்ட பாரி இறந்தது நிழலில்லாத தனிமரம் வலையில் இருந்து என்ன பிரயோசனம். இனி அவன் தந்த கொடைத்தன்மை இனி கிடைக்காது போயின என்று பாரியை இழந்ததை வருத்தமுற்றுப்பாடும்.

**'செம் புற்று ஈயலின் இன் அலை புளித்து**
**மென்தினை யாணர்த்து நந்தும் கொல்லோ**
**நிழலில் நீர் இடை தனிமரம் போல்**
**பணை கெழு வேந்தரை இறந்தும்**
**இரவலர்க்கு ஈயும் வல்லியோன் நாடே!'**

**- (புறநா.110 : 3-7)**

என்ற இப்பாடலில் மனித நேயம் வெளிப்படுகிறது,

## முடிவுரை

பாரி தேரில் சென்று கொண்டிருந்தார். அவர் போகும் வழியில் முல்லை கொடியை கண்டார். அந்த முல்லைக்கொடி படர்வதற்கு இடம் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்ததை கண்டதும் தன் தேரையே அக்கோடிக்கு கொடுத்தவர் தான் பரம்பு மலை தலைவன் பாரி என்று ஓரறிவு உயிருக்கு மனமிரங்கும் மனித நேயம் கொண்ட அவரின் மனிதநேயமே விளக்கப்பட்டுள்ளது.

## சான்றெண் விளக்கம்


1. https://tam.wikipedia.org.
2. முனைவர். மோகன், சிறுபாணாற்றுப்படை, வரி.87-91.
3. அருள், ஏ.பி.ஜெ வள்ளலார், சுத்த சன்மார்க்கம் திருவருட்பா, பா.5297.


## துணை நூற்பட்டியல்


1. அறிஞர் சுப்பிரமணியன் ச.வே - சங்க இலக்கியம் எட்டுதொகை தொகுதி - 3 மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
2. மாணிக்கனார்.அ, - பத்துப்பாட்டு வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்,ஆர் காம்ப்ளெக்ஸ், 141, உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை - 600 017. இரண்டாம் பதிப்பு - 2000.
3. துரைசாமிப்பிள்ளை.சு.ஔவை- திருவருட்பா மூலமும் உரையும் முதல் திருமுறை சிறப்பு அதிகாரி நூல் வெளியீட்டுத்துறை, அண்ணமலைப் பல்கலைக்கழகம்.